# Changes in Ritual Symbols for Status Transformation and Diminishing Tendencies of Traditional Arts

### Anthropological outlook on East Sri Lanka Drumming Arts

## அந்தஸ்த்து நிலைமாற்றத்திற்கான சடங்குசார் குறியீட்டு மாற்றங்களும் அழிந்துவரும் மரபுக் கலைகளும்
### கிழக்கிலங்கை பறை மேளக்கலை பற்றிய மானிடவியல் நோக்கு

Gunanayagam Vickneswaran[1]

***Abstract***

*Depressed caste groups have been eradicating socio-cultural aspects of their identity through some intentional activities since their depressed identity make them susceptible for social discrimination and marginalization. For them, Sanskritization is one related to rituals among these intended activities. What has been observed in East Sri Lanka is that Depressed caste groups tended to maintain paththathi tradition in rituals than changing it into Sanskrit rituals while eradicating certain caste related aspects in the rituals and worship patterns. This study is based on selected Paraiyar communities in Batticaloa district of Eastern Sri Lanka and based on qualitative information collected through ethnographic method in the selected communities. Primary information was collected by using participation observation, personal interviews and focus group discussions. This study founds two reasons for which these communities are still maintaining paththathi tradition. To these communities, firstly, paththathi rituals are intertwined with their life patterns and belief system. Secondly, these community members perceived the participation of other high caste members who approach their temples for gaining the benefits of paththathi rituals and the belief in petty gods of the tradition. It really ease the rule of untouchability and pave the way for value-consensus. The study also found that there are two reasons for Paraiyar communities to eradicate drumming in the paththathi rituals. Firstly, drumming is traditionally their caste occupation and thus the material identity create depressed status for them in the society. Secondly, Drumming is not an integral factor of their belief system and it doesn't make sense in relation to the whole ritual system of the paththathi tradition. Therefore, drumming art has become an obsolete tradition for them.*

*Keywords: paththathi, parai drumming art, caste identity, ritual, symbolic*

[1] Senior Lecturer, Department of Social Sciences, Eastern University, Sri Lanka. Email: vigneswarang@esn.ac.lk

## 1.0. அறிமுகம்

### 1.1. ஆய்வுப் பின்னணி

சமூக அமைப்பு முறையில் சமயமானது சமூக நிறுவனமாக அமைகின்ற தன்மையைப் பொறுத்து ஆலய முறைமைக்கும், சமுதாய கட்டமைப்பு, அதன் செயற்பாடுகள் என்பவற்றிற்குமிடையில் நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. இந்து ஆலயங்களைப் பொறுத்தவரை, சமுதாயத்தின் பாரம்பரிய அம்சங்களை பேணும் வகையிலான அல்லது அவற்றினை பிரதிபலிக்கின்ற அமைப்புக்களாக விளங்குகின்றமை, அச்சமயத்தின் தொன்மையான நிலைப்பாடுகளில் ஒன்று. இதனடிப்படையில் இந்து ஆலயங்களின் செயற்பாட்டு முறைமையானது இந்திய சமுதாயங்களின் மரபு ரீதியான அடுக்கமைவு முறையான சாதிக்கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்ட தன்மையை பெருமளவில் கொண்டுள்ளது. (Nanda, 1980: p.190). உண்மையில் இந்திய சாதிக்கட்டமைப்பின் நிலைபேற்றிற்கான நியாயப்படுத்தலை இந்துசமய மரபே உறுதி செய்கின்றது. இது சாதிக்கட்டமைப்பின் இயல்புகளுள் ஒன்றாகும். இந்திய பண்பாட்டு நிறுவனங்களின் வழிவந்த இலங்கையிலும் இந்துக் கோயில்கள் சாதிகளின் தொடர்பினைக் கொண்டமைந்ததாகவே பெருமளவில் காணப்படுகின்றன.

இலங்கையின் இந்துவழிபாட்டு மரபில் ஆகமம் சார்ந்த வைதீக மரபும், ஆகமம் சாராத பத்ததி மரபும் காணப்படுகின்றன. பத்ததி முறை கிழக்கிலங்கையின் கிராமிய தெய்வங்களுக்குரிய ஆலயங்களில் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழிபாட்டு மரபாகும். அதிகரித்துவரும் சமஸ்கிருதமயமாதலுக்கு மத்தியிலும் பத்ததி முறையிலான ஆலயங்களின் வழிபாட்டு மரபானது பண்பாட்டுரீதியில் பரவலான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. (குணபாலசிங்கம், விக்னேஸ்வரன், 2007). ஆகமம் சார்ந்த கோயில்களைப் போலவே பத்ததிக் கோயில்களும் சாதிக்குழுக்களுக்குரித்தான தன்மையைக் கொண்டுள்ளன. சாதிகளுக்கென்று உரித்தான கிராமியச் சிறுதெய்வங்கள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. அதேவேளை பத்ததிக் கோயில்களில் சாதிகளின் அடையாளத்துவம் சார்ந்த அம்சங்கள் உள்ளடக்கப்படுகின்ற தன்மை காணப்படுவதோடு, அவ்வடையாளத்துவ அம்சங்களிற்கு இம்முறையில் சடங்குரீதியான முக்கியத்துவமும் அளிக்கப்பட்டிருக்கின்றது. இவை சமயரீதியில் சாதிகளின் சமுதாய அடையாளத்துவத்தை உறுதி செய்யும் பொருள்சார்ந்த பண்பாட்டு அம்சங்களாகும்.

பத்ததிச் சடங்கு மரபில் சாதிக்குழுக்களின் மரபுரீதியான, கடமைகளின் பாற்பட்ட அடிப்படையிலும் புராண, இதிகாச புனைவுகளின் பாற்பட்ட வகையிலும் தெய்வங்கள் தொடர்பிலான இணைப்புக்கள் சாதிக்குழுக்களுக்கு வழங்கப்பட்டிருப்பினும், நடைமுறையில் அந்த வழக்கு பின்பற்றப்படுவதில்லை. (குணபாலசிங்கம், மற்றும் விக்னேஸ்வரன், 2007(அ)). சாதிக்குழுக்கள் தமது விருப்பின்படி பத்ததி முறையில் தெய்வங்களுக்குரிய கருவறைகள் அமைத்து வழிபடுகின்றனர். எனினும் சாதி ஒடுக்குமுறைகள், பாராபட்சங்கள் என்பவற்றிற்கு விதிவிலக்களிக்கும் எந்த ஒரு வழிமுறையும் இதனூடாக அடையாளப்படுத்தப்படவில்லை.

இதனால் ஒடுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் சமூக, பண்பாட்டுரீதியில் தமது சாதி அடையாளத்துவ அம்சங்களை திட்டமிட்ட செயற்பாடுகள் ஊடாக இல்லாமல் செய்துவருகின்றனர். (Vickneswaran, 2018).

சாதி அடையாளத்துவத்தை வெளிக்காட்டும் பொருள்சார் குறியீட்டம்சங்கள், அவர்களின் சாதிரீதியான குறைவுற்ற சமூக அந்தஸ்தினை வரையறை செய்வதுடன், அந்த அந்தஸ்து ரீதியான புறந்தள்ளல்கள், பாராபட்சங்கள் என்பவற்றிற்கு உள்ளாக்கவும் செய்கின்றது. (Ibid). இவ்வாய்வானது ஒடுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் பத்ததி முறைசார்ந்த ஆலயங்களில் தமது சாதி அந்தஸ்துக்குரித்தான அடையாளத்துவத்தினை இல்லாது செய்யும் வழிவகைகளை மையப்படுத்தி, அச்சாதி அடையாளத்துவ அம்சமாக கலைகள் அமைகின்ற வேளையில், அவை வழக்கொழியச் செய்யப்படும் அபாய நிலை குறித்தும் விபரிப்பதாக அமைகின்றது. இதன் அனுபவரீதியான சான்றினை, கிழக்கிலங்கையின் தமிழ்ச் சாதி மரபில் பறையர் சாதியினர் பறைமேளக்கலையை கைவிட்டமை தொடர்பில் மானிடவியல் ரீதியில் பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது.

### 1.2. ஆய்வு வினாக்கள்

- இவ்வாய்வானது சாதி அந்தஸ்து மாற்றம் கருதி சமஸ்கிருதமயமாதல் இடம்பெற்று வரும் நிலையில் பறையர் சாதியினர் தமது பத்ததி முறையிலான ஆலயங்களை தொடர்ந்து பேணி வருவதற்கான காரணம் என்ன?
- அவ்வழிபாட்டுமுறை மரபில் தொன்றுதொட்டு இருந்து வந்த பறை மேளக்கலையை சடங்கு நிகழ்வுகளில் நீக்கியமைக்கான காரணம் என்ன?
- அவ்வாறு நீக்கியமை காரணமாக சடங்குசார் அம்சங்களில் ஏற்பட்ட மாற்றம் குறியீடுசார் அர்த்தங்களில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது? என்பவையே இவ்வாய்வின் வினாக்களாகும்.

### 1.3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது மேற்குறிப்பிட்ட போக்கு தொடர்பில், ஒடுக்கப்பட்ட சாதிக் குழுக்களில் ஒன்றான பறையர் சாதியின் தெரிவு செய்யப்பட்ட சமுதாயங்களை மையமாகக் கொண்டு ஆராய்கின்றது. விபரண ஆய்வாகவும், தரரீதியான முறைமையை (Qualitative method) அடிப்படையாகக் கொண்டதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது. இச்சமுதாயங்களில் மேற்கொள்ளப்பட்ட இனவரைவியல் ஆய்வு முறையில் சேகரிக்கப்பட்ட தரரீதியான முதனிலைத் தரவுகளை கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு குறியீட்டு மானிடவியலை தனது கோட்பாட்டு பின்னணியாக கொண்டுள்ளது. அதாவது சமூக சூழ்நிலைகளில் கலாசாரக் குறியீடுகள் அந்தச்

சூழ்நிலையில் தொடர்புற்ற மக்களுக்கு எத்தகைய அர்த்தங்களை அளிக்கின்றது என்பது பற்றியும் அவை மக்களின் குழுரீதியான சமூக உறவுகளில் எத்தகைய விளங்கிக் கொள்ளல்களை ஏற்படுத்துகின்றது என்பது பற்றியும் குறியீட்டு மானிடவியல் கோட்பாடுகள் விளக்குகின்றன. குறியீடுகள் ஒரு சமூக முறைமையில் மற்றைய பகுதிகளுடனும் இணைந்த வகையில் சமூக ரீதியாக அர்த்தங்களை உருவாக்குகின்றனவா? அல்லது குறியீடுகள் சமூக சூழ்நிலையில் தனித்துவமாக அர்த்தங்களை ஏற்படுத்துகின்றனவா? என்பதைப் பற்றி குறியீட்டு மானிடவியல் கோட்பாடுகள் நோக்குகின்றன. இவ்வாய்வில் பறைமேளமானது ஆலயச் சடங்குகளில் ஒட்டுமொத்த முறைமையுடன் தொடர்புபட்ட குறியீட்டம்சமாக சமுதாய மக்களுக்கு தாக்கத்தையளிக்கத்தக்கதாக அமைந்துள்ளதா? அல்லது பறைமேளமானது தனியான குறியீடாக சமயச் சடங்குகளில் மக்களால் நோக்கப்படுகின்றதா? என்பதை நோக்குவதற்குப் பொருத்தமான கோட்பாடாக குறியீட்டு மானிடவியல் அமைந்துள்ளது.

இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தின் நான்கு கிராமங்களில் காணப்பட்ட பறையர் சமுகத்தினரை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. களுதாவளை, ஆரயம்பதி, புன்னைக்குளம், பிலாலிவேம்பு போன்ற கிராமங்களே கள ஆய்வின் அடிப்படைகளாகும். இக்கிராமிய சமுதாயங்கள் நோக்க மாதிரியைப் பயன்படுத்தியே தெரிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு சமுதாயத்திலும் இரண்டு குழுக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் எழுமாற்றுரீதியல் தெரிவு செய்யப்பட்டனர். பிரதான தகவல் பெறும் நேர்காணல்கள், தனிநபர் நேர்காணல்கள் என்பவற்றிற்காக தகவலாளிகள் நோக்க மாதிரி அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டனர். விடய ஆய்வுகள் கிராமத்திற்கு ஐந்து என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. இதுவும் நோக்க மாதிரியை பயன்படுத்தியே தெரிவு செய்யப்பட்டது.

### 1.4. ஆய்வுப் பிரச்சினை

சாதி அந்தஸ்தில் குறைவுற்ற குழுக்கள் சமூகரீதியில் பாராபட்சங்களையும் புறந்தள்ளல்களையும் தவிர்ப்பதற்காக, வழிபாட்டு முறைகளில் பிரதிபலிக்கின்ற பொருள்சார்ந்த குறியீட்டம்சங்களை இல்லாது செய்வதும் அல்லது திட்டமிட்ட செயற்பாடுகளூடாக வழக்கொழியச் செய்து வருகின்றமையும் அவதானிக்கப்பட்ட விடயமாகும். (Silva, Sivapragasam and Thanges, 2009: p.124). பொதுவாக சில உயர் அந்தஸ்துக்குரிய சாதிகளின் வழிபாட்டு முறைகளை தமது ஆலயங்களில் பிரதியீடு செய்வதனூடாக சமய அடிப்படையில் அந்தஸ்து புறந்தள்ளல்களை தவிர்த்து உயர் சமூக நிலைமைக்கும் உரித்துக்கோரும் வழிமுறைகள் இந்தியாவில் பின்பற்றப்பட்ட தன்மை மானிடவியலாளர்களால் அவதானிக்கப்பட்டதாகும். இச்செயன்முறை சமஸ்கிருதமயமாதல் என அழைக்கப்பட்டது. (Srinivas, 1952).

குறிப்பாக சமஸ்கிருத வழிபாட்டு முறைகளாக கிராமிய வழிபாட்டு முறைகளை மாற்றியமைப்பதன் ஊடாக மரபுரீதியான அந்தஸ்தில் குறைவுற்ற சாதிகள் உயர் சமூக நிலைமைக்கு உரித்துக்கோரியிருந்தமை இந்தியாவில் இடம்பெற்ற சமூக நிகழ்வுகளாகும். இலங்கையிலும் இந்த சமஸ்கருதமயமாக்கல் போக்குகள் கிராமிய வழிபாட்டு முறையிலான பத்ததி ஆலயங்களில் இனங்காணப்பட்டுள்ளன. ஆயினும் சாதி அந்தஸ்து நிலைமாற்றம் குறித்து அடையாளத்துவ மாற்றங்களை மேற்கொண்டு வரும் ஒடுக்கப்பட்ட சாதிகள் சமஸ்கிருதமயமாதலை தழுவவில்லை என்பது கிழக்கிலங்கையில் அவதானிக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் தொடர்பில் கிழக்கிலங்கையில் அவதானிக்கப்பட்ட விடயம் யாதெனில், பத்ததி வழிபாட்டு மரபை மாற்றாது தொடர்ந்து பேணிவரும் அதேவேளை, அம்மரபில் இணைக்கப்பட்டிருந்த தமது சடங்கு சார்ந்த பிரத்தியேகமான அடையாளங்களை இல்லாது செய்து வருகின்றனர்.

இவ்வாய்வானது மேற்குறிப்பிட்ட போக்கு தொடர்பில் ஒடுக்கப்பட்ட சாதிக்குழுக்களில் ஒன்றான பறையர் சாதியின் தெரிவுசெய்யப்பட்ட சமுதாயங்களை மையமாகக் கொண்டு ஆராய்கின்றது. சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக செயற்பட முற்பட்ட இச்சாதியினரின் படித்த உயர்குழாம் இளைஞர்கள், தமது சாதியின் மரபுத்தொழிலாகக் கருதப்படும் பறைமேளமடித்தல் என்பது கலையாகக் கருதப்படுகின்ற போதிலும் அக்கலைக்குரிய கௌரவத்தினை வழங்காது, சாதியின் குறைவுற்ற அந்தஸ்து மதிப்பினையே ஏனைய சமூகங்கள் தமக்கு அளிப்பதாக அவர்கள் விமர்சித்தனர். இதனால் குறைவுற்ற அந்தஸ்து அடையாளத்தையளிக்கும் பறைமேளமடிப்பதனை தமது சாதி உறுப்பினர்கள் கடைப்பிடிக்கக் கூடாது என்றும், அதில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அத்தோடு தமது ஆலயங்களிலும், பிற ஆலயங்களிலும் பறைமேளமடிப்பதனை இனிமேல் தமது சாதித் தொழிலாக தமது உறுப்பினர்கள் மேற்கொள்ளக்கூடாது என்றும் அறிவுறுத்தியதோடு, தமது ஆலயங்களில் இருந்த பறைமேளங்களை உடைத்து இல்லாது செய்யும் தீவிரப் போக்கினையும் மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் பத்ததி வழிபாட்டுமுறை ஆலயங்களில் சடங்குசார்ந்த முக்கியத்துவத்தினை பெற்றிருந்த பறைமேளமானது வழக்கொழிக்கப்பட்டதாக மாறியது. எனினும் பத்ததி முறை மாற்றப்படாது தொடர்ந்து பேணப்பட்டு வந்த அதேவேளை, சமஸ்கிருதமயமாக்கலுக்கும் இடமளிக்கப்படவில்லை. அவ்வாறெனின் சமயரீதியில் சடங்கு சார்ந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த குறியீட்டம்சம் இல்லாது செய்யப்படுகின்றமையானது சமூகரீதியில் அந்தஸ்து நிலை மாற்றத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது.

எனினும் சமஸ்கிருதமயமாதல் இங்கு இடம்பெறவில்லை. இதன்படி வழிபாட்டம்சங்கள் மக்களது தேவைகளின் பாற்பட்ட விடயங்களாகவும் அங்கு சடங்கு சார்ந்த குறியீடுகள் சமுதாய உறுப்பினர்களுக்கு சூழ்நிலைக்கேற்ப அர்த்தங்களையே உருவாக்குவதாகவும் கொள்ளப்பட முடியும். அதாவது பறைமேளமானது சடங்கின் குறியீட்டம்சங்களாக இல்லாது

செய்யப்பட்டிருப்பினும் அது அம்முறைமையின் ஒழுங்கில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. எனவே குறியீடுகள் சூழ்நிலைக்கேற்ப சமுதாய உறுப்பினர்களால் அர்த்தமளிக்கப்படுபவையாகும். அதேவேளை பறைமேளக்கலையானது சாதியின் அடையாளத்துவ குறியீடாக அமைகின்றமையினால் அது சமூகத்தில் வழக்கொழிக்கப்படச் செய்யப்படுவதோடு கலை என்ற நிலைப்பாட்டில் அது மதிப்பளிக்கப்படாமல் அழிவுறுகின்ற நிலைக்குச் செல்கின்றது.

## 2.0. கோட்பாட்டுப் பின்னணி

### 2. 1. மானிடவியலில் குறியீட்டுவாதம்

குறியீட்டு மானிடவியலானது, ஒரு சமூகத்திலுள்ள மக்கள் தம்மைச் சுற்றியுள்ள விடயங்கள் பற்றி விளங்கிக்கொள்ளும் வழிமுறைகளை ஆய்வு செய்யும் மானிடவியல் பிரிவாக அமைகின்றது. அதாவது தம்மைச் சூழவுள்ள பொருள்சார் அம்சங்கள், தமது சமூகத்தின் மற்ற உறுப்பினர்களது நடத்தைகள், விளைவுகளை உண்டு பண்ணும் செயற்பாடுகள் குறித்து கொண்டிருக்கும் விளங்கிக் கொள்ளல்கள் அல்லது அவற்றிற்கு வழங்கும் வியாக்கியானங்கள் என்பன பற்றிய கற்கையாக இது அமைகின்றது. இக்கற்கைப் பிரிவின் விபரணத்தின் பிரகாரம் நோக்கினால், ஒரு சமூகத்தில் வாழும் மக்கள் தமது சமூக சூழ்நிலைகளில் நிகழும் விடயங்கள் குறித்து அர்த்தப்பாடுள்ள வகையில் விளங்கிக் கொள்கின்றார்கள். இவ்விளங்கிக் கொள்ளல்களின் அர்த்தப்பாடுகள் அந்த சமூகத்தைச் சேர்ந்த மற்றைய மக்களாலும் பகிரப்படுவதாக அமைகின்றது. இதன்படி மக்கள் அர்த்தங்கள் உள்ளடங்கிய வகையில் சமூக தோற்றப்பாடுகளை வியாக்கியானிக்கின்றனர். இந்த வியாக்கியானங்கள் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களாலும் பகிரப்படுகின்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. இது அர்த்தங்களின் ஒரு கலாசார முறைமையினை தோற்றுவிக்கின்றது. மனித சமூக வாழ்க்கை பற்றி எழுப்பப்படும் அடிப்படையான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக ஒவ்வொரு கலாசாரமும் குறியீடுகளையும், அது சார்ந்த செயன்முறைகளையும் உள்ளடக்கியுள்ளன. சடங்குகள், புனைவுகள் போன்ற குறியீட்டு அம்சங்கள் மூலமாக மனிதர்கள் தமது சமூகம் தொடர்பில் அர்த்தப்பாடுகளை உருவாக்கியளிக்கின்றனர். (Geertz, 1966).

குறியீட்டு மானிடவியலானது கலாசாரத்தினை அர்த்தங்களின் ஒரு சுதந்திரமான முறைமை என்பதாக நோக்குகின்றனர். அதாவது பிரதானமான குறியீடுகளை வியாக்கியானிப்பதன் ஊடாக கருத்துருவாக்கப்படும் முறைமையாக அதனை காண்கின்றனர். ஒரு கலாசாரக் கோட்பாடாகக் கருதுகையில் குறியீட்டு மானிடவியலானது இரண்டு தளங்களைக் கொண்டதாக கண்டுகொள்ள முடியும். முதலாவது, புத்திசாதுர்யமான வகையில் அமையாவிட்டாலும் நம்பிக்கைகள், அர்த்தங்களின் ஒரு கலாசார முறைமையின் பகுதியாக விளங்கிக்கொள்ளப்படும் போது கிரகித்தலுக்குள்ளாகின்றது. இரண்டாவது செயல்கள் வியாக்கியானிப்புக்களால்

வழிநடத்தப்படுவதோடு, எண்ணக்கருசார்ந்த, மற்றும் பொருள்சார்ந்த செயற்பாடுகளை வியாக்கியானிப்பதற்கு உதவியாக குறியீட்டுவாதம் அனுமதிக்கப்படுகின்றது. மரபு ரீதியாக குறியீட்டு மானிடவியலானது சமயம், சடங்குகள், புனைவுகள், வழக்காறுகள், ஆற்றுகைக் கலைகள் முதலானவற்றினை நோக்குவதாக அமைகின்றது. அத்தோடு சமூக ஒழுங்கமைப்பின் மற்றைய வடிவங்களான உறவுமுறை, அரசியல் முறைமைகள் பற்றியும் ஆய்வு ரீதியில் நோக்குவதாக அமைகின்றது. இச்சமூக வடிவங்களைக் கற்பதன் மூலமாக ஒரு சமுதாயக் குழுவொன்றின் நாளாந்த வாழ்க்கையில் குறியீடுகளின் பங்கு பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாக அமைகின்றது. (Howard & Janet, 1992: p263).

## 2. 2. சடங்குகளும் குறியீடுகளும்

நம்பிக்கைகளும் புனைவுகளும் உள்ளடக்கும் சிந்தனைகள், சித்திரிப்புக்கள் சடங்குகளிலேயே வெளிப்படுத்தப்படுகின்றன. இவை கலாசார முறைமைகளின் உள்ளடக்கங்களாகவும் அமைகின்றன. சமயரீதியான கருத்துக்கள் குறியீடுகள் ஊடாகவே கலாசாரங்களில் வெளிப்படுத்தப்படுவதனால், மானிடவியலாளர்கள் சமயரீதியான நம்பிக்கைகளுடன் தர்க்க ரீதியில் அவை எவ்வாறு இணைக்கப்படுகின்றன என்பதை விளங்கிக்கொள்ள முற்பட்டுள்ளனர். சமய ரீதியான குறியீடுகள் கடவுள்களின் பெயர்களையோ, ஆன்மாக்களின் பெயர்களையோ உள்ளடக்கிய ஒலிகளாக இருக்கலாம் அல்லது செய்யுள்களாக அமையலாம். அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பற்றிய பாடல்களாக, அதேபோல் சமய ரீதியான குறியீடுகள், உருவங்கள், ஓவியங்கள், உடைகள், ஒப்பனைகள் முதலான பொருள்சார் அம்சங்களாகவும் அமையலாம். (Geertz, 1966). புனைவுகளில் இடம்பெறும் உலகம் பற்றிய புனிதமான கதைகளில் குறிப்பிடப்படும் விடயங்கள் சமயக் கருத்தியல்களுடன் மிக வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளன. இவற்றின் புனிதத்தன்மை, புனித சக்தி என்பன சடங்குகளின் ஊடாக செயல்நிகழ்வுகளாக வெளிக்காட்டப்படும் போதே மக்களுக்கு தெளிவுபடுத்தப்படக் கூடியதாக அமைந்துள்ளன. (Durkheim, 1965). உண்மையில் சடங்குகளில் சமயக் கருத்துக்கள் நாடகமாகவோ, நடனமாகவோ அல்லது பௌதீக உடல் அசைவுகள் மூலமோ செயல்நிகழ்வுகளாக்கப்படுகின்றன. இவை அனைத்துமே குறியீடுகளையே அடிப்படையாகக் கொண்டவை. ஏனெனில் சமயக் கருத்தியல்கள் சாதாரணமாக விளங்கிக்கொள்வதற்கு சிக்கல்த்தன்மை வாய்ந்தவையும், சிந்தனாம்சங்களாகவுமே காணப்படுகின்றன. அத்தகைய விடயங்கள் சாதாரண மக்களால் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக இருந்தால், அவை குறியீட்டு ரீதியான பிரதிநிதித்துவப்படுத்தல்களாக வெளிப்படுத்தப்பட வேண்டும். (Douglas, 1970).

## 2.3. குறியீடுகளும் அர்த்தங்களும்

மானிடவியலாளர்கள் ஏனைய சமூக நடத்தைகளில் இருந்து சடங்குகள் சார்ந்த நடத்தைகளை வேறுபடுத்தி நோக்குகின்றனர். ஏனெனில் சடங்குகள் முறைசார்ந்த அடிப்படையில் இடம்பெறுபவை. அவை முறையான வடிவமைப்புக்குட்பட்டவையாக அமைந்திருப்பதோடு, மீள் படிநிலைப்படுத்தப்பட்டவையாகவும் ஒரே படித்தாக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன.. சடங்குகள் அதற்கென உரித்தான புனிதமான இடங்களிலேயே நிகழ்த்தப்படுகின்றன. அத்தோடு அதற்கென உரித்தான காலப்பகுதிகளிலேயே நிகழ்த்தப்படுகின்றன. சடங்குகள் மொழிசார்ந்த அடிப்படையில் சொற்களின் தொடர்ச்சியான ஒழுங்கில் அமைவதோடு, செயல்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட தன்மையையும் கொண்டவை. மானிடவியலாளர்களைப் பொறுத்தவரை, சடங்குகள் அதில் பங்குபற்றுபவர்களைப் பற்றியும், அவர்களது பாரம்பரியங்கள் பற்றியும் தககவல்களை அளிப்பனவாக உள்ளன. ஆண்டுக்கு ஆண்டு தலைமுறைக்குத் தலைமுறை மீள மீள நிகழ்த்தப்படும் போது, சடங்குகள் சமயரீதியான நம்பிக்கைகள், விழுமியங்கள், உணர்வுகள் என்பவற்றை செயல்வடிவப்படுத்துகின்றன. இதனால் சடங்குகள் சமூக செயல்களாகக் கொள்ளப்படுகின்றன.

குறியீட்டுவாதம் தொடர்பில் கலாசார முறைமையை அடிப்படையாகக் கொண்டு தெளிவான மானிடவியற் கோட்பாட்டினை உருவாக்கியவர் விக்டர் டேனர் (Victor Turner) ஆவார். சடங்கு சார்ந்த குறியீடுகளின் தன்மை பற்றிய இவரது ஆய்வுகள், குறியீட்டுவாதத்தின் கட்டமைப்புக்கள் பற்றி விரிவான விளக்கத்தையளித்துள்ளன. குறியீடுகள் ஒவ்வொன்றும் பிரத்தியேகமான அர்த்தங்களைக் கொண்டிருப்பதாகவும், அவை சடங்குமுறைமையின் தொடர்ச்சியான படிமுறைகளை உள்ளடக்கிய முறைமையில் முக்கியமான அர்த்தங்களை அளிப்பதாகவும் ரேனர் கருதினார். இதன்படி முறைமையின் பகுதிகளுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்தும் வகையில் அர்த்தமுள்ள இணைப்புக்களை குறியீடுகள் கொண்டிருப்பதாகவும், இதனால் குறியீடுகளின் அர்த்தங்கள் ஒட்டுமொத்த முறைமையுடன் தொடர்புபடுத்தி நோக்கும் போதே விளங்கிக்கொள்ளப்பட முடியும் என்றும் இவர் குறிப்பிட்டிருந்தார். (Turner, 1969).

இவ்வாய்வானது குறியீட்டு மானிடவியல் கோட்பாட்டுப் பின்புலத்தினை அடிப்படையாகக் கொண்டு பறைமேளக் கலையின் வழக்கொழிவுப் போக்கு குறித்தும் அதற்கான சமூகநிலை மாற்றங்கள் குறித்தும் ஆய்வுசெய்வதாக அமைந்துள்ளது. சமய சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறும் சடங்கு ரீதியான அம்சமாக பறைமேளம் அமைகின்ற போதிலும் சாதி அந்தஸ்திற்கான குறியீடாக அமைகின்றமையால் அது அடையாளத்துவ மறைப்பிற்காக வழக்கொழிக்கப்படுகின்ற வேளையில் சடங்கு ரீதியில் அது ஏற்படுத்தும் தாக்கங்களை ஆய்வுசெய்வதற்கு இக்கோட்பாட்டு நோக்கு பொருத்தமாக அமைந்துள்ளது.

### 3.0. ஆய்வின் கண்டறிதல்கள்

### 3.1. சமஸ்கிருதமயமாதலைத் தழுவாது பத்ததி முறையைப் பின்பற்றுகின்றமை

சாதி அந்தஸ்து மாற்றம் குறித்து சமஸ்கிருதமயமாக்கல் செயற்பாடுகள் அந்தஸ்துக் குறைவுற்ற சாதிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில், பறையர் சாதியினர் தமது அந்தஸ்துக்குரிய பொருள்சார்ந்த அடையாளத்துவ அம்சங்களை இல்லாது செய்து வருகின்றமை அவதானிக்கப்பட்ட விடயமாகும். இக்குழுவினர் தமது சாதி அந்தஸ்தினை வெளிப்படுத்தும் பறைமேளம், பறைமேளக் கூத்து என்பவற்றை ஆலய வழிபாட்டு முறையில் இடம்பெறும் சடங்குகளில் இருந்து அகற்றியிருந்தனர். பறைமேளம் ஒரு பொருள்சார் குறியீடாக தமது சாதி அடையாளத்துவத்தை வெளிப்படுத்துகின்ற அடிப்படையில் அது குறைவுற்ற அந்தஸ்தாக அடையாளப்படுத்தலை வரையறுப்பதனால், அதனை சடங்கு சார்ந்த தளத்தில் இருந்து வழக்கொழியச் செய்திருந்தனர். இது அவர்களது திட்டமிட்ட செயற்பாடாகும். அந்தஸ்துரீதியான மாற்றம் கருதி இவர்கள் இந்த மாற்றத்தினை ஆலயங்களில் சடங்குரீதியாக மேற்கொண்டிருந்தாலும், தமது ஆலயத்தில் பத்ததி முறையிலான கிராமிய வழிபாட்டு மரபை மாற்றுவதற்கு முயற்சிக்கவில்லை. பொதுவாக அந்தஸ்து நிலை மாற்றத்திற்காக சடங்குகளில் சமஸ்கிருதமயமாக்கலானது குறைவுற்ற சாதிகளினால் கடைப்பிடிக்கப்படுகின்ற செயற்பாடாக மானிடவியல் கோட்பாடுகள் விபரிக்கின்ற போதிலும், பறையர் சாதியினரின் விடயத்தில் அது பொருந்தாத நிலைப்பாட்டில் உள்ளது.

### 3.2. ஆலயச் சடங்குகளில் இருந்து பறைமேளக் கலையை நீக்கியமை

பொதுவாக மேற்கத்தேயமல்லாத சமூகங்களில் கலைகளுக்கும் சமயத்திற்கும் நெருங்கிய தொடர்பிருப்பது மானிடவியலாளர்கள் கண்டறிந்த விடயமாகும். (Kottak, 2008: p. 511). பறைமேளம், பறைமேளக்கூத்து என்பன பறையர் சமுதாயத்தினரின் பத்ததி வழிபாட்டுச் சடங்குகளில் முக்கியத்துவம் மிக்க கலைகளாக திகழ்ந்து வந்தன. அத்தோடு பிற சாதிச் சமுதாயங்களின் ஆலயங்களிலும் சடங்குகளில் பறைமேளம் அடித்தல் ஒரு அம்சமாகவே காணப்பட்டு வருகின்றது. இதனால் பறைமேளத்திற்கும் பத்ததிச் சடங்குகளிற்குமான தொடர்பு சாதி வேறுபாட்டிற்கப்பால் அனுமதிக்கப்பட்ட விடயமாகவே விளங்கி வந்துள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் சமஸ்கிருதமயமாக்கலினையும் மேற்கொள்ளாது, அதே பத்ததி மரபினை கடைப்படித்து வருகின்றவிடத்து, அதில் இனங்காணத்தக்க அம்சமாகவிருந்த பறைமேளத்தினை வழக்கொழியச் செய்தமைக்குக் காரணம் என்ன என்பது தொடர்பில் இவ்வாய்வானது விடைத்தேடலினை தரவுப்பகுப்பாய்வில் மேற்கொண்டிருந்தது.

## 4.0. ஆய்வுப் பகுப்பாய்வு

### 4.1. பத்ததி முறை வழிபாட்டைப் பேணுவதற்கான காரணங்கள்

இவ்வாய்வானது சமஸ்கிருதமயமாக்கலை மேற்கொள்ளாது கிராமிய பத்ததி முறையை தமது ஆலயத்தில் பறையர் சாதியினர் பேணிவருவதற்கு காரணங்கள் என்ன என்பது பற்றிய தேடலை மேற்கொண்டிருந்தது. இங்கு பறையர் சாதியினர் பத்ததி வழிபாட்டை தொடர்ந்து பேணுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளமையை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

முதலாவதாக, பறையர் சாதியினரைப் பொறுத்தவரை, பத்ததி மரபுச் சடங்குகள் அவர்களது நம்பிக்கை முறைமைகளுடனும் வாழ்வியல் நடைமுறைகளுடனும் இணைந்தவை. சமய ரீதியான சடங்குகள் மக்களது நம்பிக்கைகள் சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய குறியீடு சார்ந்த ஒழுங்கு முறையாகும். தமது உலக ஒழுங்கு பற்றி மக்கள் கொண்டிருக்கும் பார்வைகள், எண்ணங்கள், இந்நம்பிக்கைகள் முறைமைகள் சமூக நடத்தைக்கான விழுமியங்களிற்கும் அடித்தளமாக அமைகின்றன. விழுமியங்கள் சமூக நடத்தைக்கான தராதரங்களாகும். இது மக்களது சமூக வாழ்வியலில் அன்றாட சமூக நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கும், ஆளுகை செய்வதற்குமான உள்ளர்த்தங்களைக் கொண்டுள்ளன. (Keesing, 2008: p. 391). மேலும் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளில் மேற்கொள்ளப்படும் சம்பிரதாயங்களுக்கும் சூழலியல் சார்ந்த அம்சங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. விவசாயம், கால்நடைவளர்ப்பு, காலநிலை மாற்றங்கள், நோய்கள் முதலான அம்சங்களுடன் தொடர்புபட்ட அர்த்தப்பாடுகளோடு இணைந்த வகையிலேயே இச்சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாகதம்பிரான் வழிபாட்டில் பாம்புத் தெய்வத்திற்குரிய சடங்குகள், மாரி அம்மன் தெய்வத்திற்குரிய பந்தல் சடங்குகள் என்பன விவசாய நிலங்கள் தொடர்பில், அவற்றின் மேம்பாட்டினை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுபவை. இவற்றை விட அம்மன் குளிர்த்திச் சடங்கானது, அக்கினி நாட்கள் என குறிப்பிடப்படும் மிக வெப்பமான மாதத்தினை அடையாளப்படுத்துவதுடனும், அதில் ஏற்படும் பாரதூரமான வெப்ப சூழ்நிலையினால் ஏற்படும் நோய்கள் குறித்த தீர்விற்கான தயார்ப்படுத்தலுடனும் தொடர்புபட்டது.

மேலும் பத்ததிச் சடங்கு முறைகளில் கட்டுச் சொல்லுதல், தெய்வமாடுதல் என்பவை தனிநபர், குடும்ப பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிய உதவும் உளரீதியான சுகப்படுத்தலை அளிக்கும், உள்ளடக்கங்களைக் கொண்டிருப்பதோடு, நாட்பட்ட நோய்களுக்கான சுகமளித்தல் அம்சங்களையும் கொண்டுள்ளது. இவ்வாறான விடயங்கள் தனிமனித, சமுதாய தேவைகளினை திருப்தி செய்யத்தக்க ஆற்றல்களை கொண்டவையாக காணப்படுகின்றன. மானிடவியலாளர்களை பொறுத்தவரை, சமயமானது உளவியல் ரீதியான செயற்பாடுகளை ஆற்றுகின்றமை, சமுதாய உறுப்பினர்களின் தேவைத் திருப்தியை இலக்காகக் கொண்டேயாகும். (Jha, 1999: p. 156).

இதனடிப்படையில் பத்ததி வழிபாட்டுமுறைச் சடங்குகள் இச்சாதிக்குழுவை உள்ளடக்கிய சமுதாய உறுப்பினர்களின் வாழ்வியல் நடைமுறைகளுடனும் இணைந்துள்ளது. ஏனெனில் இச்சமுதாய உறுப்பினர்கள் அநேகமாக இத்தகைய தேவையின் திருப்தியினை இச்சடங்குகளின் மூலமே பெற்றுக்கொள்கின்றனர். ஆக மொத்தத்தில் இவர்களது சூழலியல் சார்ந்த வாழ்வும், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் மீதான நம்பிக்கையும் பத்ததிச் சடங்குகளின் நடைமுறையோடு நெருக்கமான தொடர்புபட்டன. இதனால் பத்ததி முறையை சடங்கு ரீதியில் மாற்றுவதற்கு இச்சமுதாயத்தினர் இடமளிக்கவில்லை.

இரண்டாவதாக இக்குறைவுற்ற சாதி அந்தஸ்துச் சமுதாயங்களின் பத்ததி முறைசார்ந்த ஆலயங்களில் உயர்சாதிக் குழுக்களை அல்லது சமுதாயங்களைச் சார்ந்த மக்கள் சடங்கு சார்ந்த பங்குபற்றலிற்காக வருகை தருவது, தமது சாதியினருக்குக் அந்தஸ்து ரீதியில் கிடைக்கும் அங்கீகாரமாக கருதுவதால் ஆகும். சிறுதெய்வங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையினாலும், அதனோடு தொடர்புபட்ட சடங்குகளின் பயன்கள் கருதியும் பிற சாதிச் சமுதாயங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் பறையர் சமூகத்தினரது பத்ததி வழிபாட்டு ஆலயங்களுக்கு வருகை தருகின்றனர். பத்ததி வழிபாட்டுச் சடங்குகள் தனிநபர் சார்ந்த பிரச்சினைகளுக்கான சுகமளித்தல் உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதும், சிறுதெய்வங்களின் பிரத்தியேகமான ஆற்றல்களும், செயற்பாடுகளும் மற்றும் அது தொடர்பாக சமூக வாழ்வில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளும், சமுதாய வரையறைகளைக் கடந்து மக்கள் இந்தக் கிராமிய வழிபாட்டுத்தலங்களைப் பெருமளவில் அணுகுவதற்குக் காரணமாகும்.

இச்சமுதாயத்தினருக்கு அருகில் வசிக்கும் உயர்சாதிச் சமுதாய மக்கள் தமது கிராமங்களிலோ அல்லது சமுதாய எல்லைக்குள்ளேயோ அல்லது தமது சாதிக்குரித்தான வகையிலோ சிறுதெய்வங்களுக்குரிய ஆலயங்களையோ அல்லது பத்ததி முறைசார்ந்த கிராமியக் கோயில்களையோ கொண்டிருக்காத சந்தர்ப்பங்களில், பத்ததிச் சடங்குகளின் பலன்களை பெறும்பொருட்டு பறையர் இச்சமுதாயத்தினரது பத்ததி ஆலயங்களை நோக்கி ஈர்க்கப்படுகின்றனர். இவ்வாறு பிற உயர் சாதிச் சமுதாயத்தினர் தமது ஆலயங்களிற்கு வழிபாட்டில் ஈடுபடுவதற்காக வருவது தமது சாதிச் சமுதாயத்திற்கு அவர்கள் அந்தஸ்து ரீதியில் ஓர் அங்கீகாரத்தினை அளிப்பதாக அவர்கள் கருதுகின்றனர். அதாவது தமது சமுதாய ஆலயத்தின் தெய்வத்திற்கு பிற சமுதாயத்தினர் மரியாதை செய்து வழிபாடுகளில் பங்கேற்பது, தமது சமுதாயத்திற்கு அவர்கள் அளிக்கும் உயர் அந்தஸ்து சார்ந்த அங்கீகாரம் என்றே இவர்கள் கருதுகின்றனர்.

கடந்த காலங்களில் ஒடுக்கப்பட்ட சாதிக் குழுவாக தம்மைக் கருதி, தமது சமுதாய ஆள்புல எல்லைகளுக்குள் சமூக ஈடுபாடுகளை புறந்தள்ளிய உயர்சாதியினர், காலப் போக்கில் தமது சமுதாயத்துக்குரிய இடமொன்றில் சமய செயற்பாடுகளில் பங்குபற்றுவது, அவர்களது தாழ்த்தப்பட்ட நிலைப்பாட்டில் தளர்வான தன்மையை ஏற்படுத்தியதாகவே கருதப்பட முடியும்.

அதுவும் சடங்கு ரீதியான தூய்மையின் அளவீட்டினை மையமாகக் கொண்டு மதிப்பிடப்படும் தீண்டாமை எனும் இடைவினை மீதான இறுக்கமான மட்டுப்பாடு நடைமுறையில் இல்லாமல் செய்யப்படுவது, உண்மையில் அந்தஸ்துரீதியில் ஏற்படும் மேம்பாடான ஒரு மாறுதலாகவே உள்நோக்கப்படத்தக்கதாகும்.

தீண்டாமை என்பது சாதி அடுக்குமுறையில் அந்தஸ்து நிலைக்குழுக்களுக்கிடையிலான உறவுமுறையினால் தூய்மை, துடக்கு எனும் நிர்ணயங்களை அடிப்படையாகக் கொண்டு, எந்தெந்த சாதிகள் உறவு முறையில் தொடர்பு வைத்துக் கொள்ளத்தக்கவை, உறவுகளை பேணுவதில் தவிர்க்கப்பட வேண்டியவை எனும் வரையறையின் வரைபு என்றே குறிப்பிடலாம். பொதுவாக அடுக்கமைவின் கீழ்மட்ட நிலைமைகளில் காணப்படும் குறைவுற்ற அந்தஸ்துக்குரியனவாக கணிக்கப்பட்ட சாதிகள் தீண்டத்தகாத குழுக்களாக குறிப்பிடப்பட்டிருப்பதோடு, உயர் அந்தஸ்து நிலைக்குரிய சாதிகள் அக்குழுக்களுடன் பௌதீகரீதியில் எந்தவித தொடர்பினையும் பேணுவது தவிர்க்கப்பட்டுள்ளது. இங்கு தீண்டாமை எனும் விலக்கு, சமய ரீதியில் சடங்கு சார்ந்த தூய்மையின் கருத்தியற்படியே நியாயப்படுத்தப்பட்டிருந்தது. (Dumont, 2004: p. 133). அதாவது சமூக உறவில் சாதிக்குழுக்களுக்கிடையிலான தீண்டாமை எனும் மட்டுப்பாடுகள் சமய ரீதியிலேயே நிலைப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறானதொரு சூழ்நிலையில் சமயரீதியான விடயத்தில் சாதிகளுக்கிடையில் தீண்டாமை எனும் மட்டுப்பாடு மீறப்படுவது, அந்தஸ்து நிலையில் மாற்றத்தினை கருத்தில் கொள்ளத் தூண்டும் ஒன்றாகவே நோக்கப்பட வாய்ப்புள்ளது.

தீண்டத்தகாத வகைப்பாட்டில் உள்ளடங்கும் இச்சாதியினரின் சமயத்தலம் ஒன்றில் உயர்சாதியினர் பங்குபற்றுவதென்பது தமது ஒடுக்கப்பட்ட அந்தஸ்து நிலைப்பாட்டினை சமூகரீதியில் பிற குழுக்கள் அங்கீகரிக்கவில்லை அல்லது ஏற்றக்கொள்ளவில்லை என்றே இவர்கள் எண்ணுகின்றனர். ஒடுக்கப்பட்ட அந்தஸ்து நிலை என்பது சமூகரீதியில் ஏற்றுக்கொள்ளமுடியாத உரிமை மீறலாக கருதும், பல குறைவுற்ற அந்தஸ்துக்குரியதாக கணிக்கப்பட்ட தீண்டத்தகாத வகைப்பாட்டிற்குட்பட்டதாக கருதப்பட்ட சாதிகள் பல, சமூக சீர்திருத்தம் எனும் தொனிப்பொருளில் மரபுரீதியான ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுக்க முற்பட்டிருந்தன.

சமயரீதியாக நியாயப்படுத்தப்பட்ட இத்தீண்டாமையினை மறுதலிப்பதற்காக, பல ஒடுக்கப்பட்ட சாதிக் குழுக்கள் சமூக சீர்திருத்தம் எனும் தொனிப்பொருளில் மரபுரீதியான ஒடுக்கு முறைக்கு எதிராக குரல் கொடுக்க முற்பட்டிருந்தன. சமயரீதியாக நியாயப்படுத்தப்பட்ட இத்தீண்டாமையினை மறுதலிப்பதற்காக இக்குழுக்களைச் சார்ந்த பல குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தினை தழுவியிருந்தன. இன்னும் சில சமுதாயங்களில் பொருளாதார உயர்வினை அடைந்த ஒடுக்கப்பட்ட சாதிக்குழுக்கள் சமஸ்கிருதமயமாதலை மேற்கொள்ளத்

தொடங்கியிருந்தன. சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக போராட முனைந்த பறையர் சமுதாயத்தினர் பெருமளவில் கிறிஸ்தவத்தை தழுவாமலும் அல்லது சமஸ்கிருதமயமாதலை பின்பற்றாதும் கிராமிய வழிபாட்டு முறையான பத்ததி முறையினை தொடர்ந்து பேணிவருவதற்கு மரபுரீதியான இடைவினை விலக்குகளை புறந்தள்ளி, உயர் சாதியினர் தமது ஆலயத்தில் சடங்குகளில் பங்குபற்றுவதும், அதன் காரணமாக தமது சமூக அந்தஸ்து ஒடுக்கப்பட்ட தன்மைக்குரியதல்ல என்னும் உள்நோக்கினைக் கொண்டிருப்பதனாலேயே ஆகும்.

### 4.2. பறைமேளக் கலையை சடங்குகளில் இருந்து நீக்கியமைக்கான காரணங்கள்

பத்ததி முறையை பின்பற்றிய போதிலும் பறை மேளக் கலையை சடங்கு நிகழ்வுகளில் இருந்து அகற்றியதற்கும் இரண்டு பிரதான அடிப்படைகள் உள்ளமை இவ்வாய்வில் இனங்காணப்பட்டது.

முதலாவது பறை மேளம் இச்சாதியினரது தொழில் சார்ந்த அடையாளத்துவமாக அமைவதோடு அது தம்மை அந்தஸ்த்து குறைவான சமுதாயமாக அடையாளப்படுத்தவும் காரணமாக அமைவதனாலாகும். பத்ததிச் சடங்குகளில் பொதுவான முக்கியத்துவத்தினைப் பெற்றிருந்தாலும் பறைமேளக் கலையானது பறையர் சாதியினரின் மரபுரீதியான சாதித்தொழிலாக கணிக்கப்பட்டிருந்தது. சாதிகள் ஒவ்வொன்றும் தொழில்களுடன் பொறுப்பாக்கப்பட்டிருக்கின்றன. இது பாரம்பரியமான, மரபுரீதியான ஏற்பாடு. இச்சாதித் தொழில்களை அடிப்படையாகக் கொண்டே சமூக தொழிற்பிரிப்பு அமைந்திருந்தது. (Nanda, 1980, p. 190). சமூகத்தில் ஒவ்வொரு சாதிக்கும் சமூக இயக்கத்தின் தேவைகருதி சேவைத்தொழில்கள் வகுக்கப்பட்டிருந்தன. மரபு ரீதியாக வகுக்கப்பட்ட இத்தொழில்கள் அச்சாதியினரின் அந்தஸ்தினை தீர்மானிக்கும் விடயங்களாகவும், அதற்கான சடங்குரீதியான தூய்மை அல்லது துடக்கு தொடர்பான அளவீட்டு மதிப்பீடுகளாகவும் அமைந்திருந்தன. இது அந்தஸ்துரீதியான குழுக்களின் அடையாளத்துவமாகவும் விளங்கியது. சாதிக்குழுக்களின் அடையாளத்தை வெளிப்படுத்துகின்ற பொருள்சார்ந்த குறியீடுகளாகவும் இத்தொழில்கள் விளங்குகின்றன. பறையர் சாதியினரைப் பொறுத்தவரை, பறைமேளமடித்தல் அவர்களது சாதித் தொழில். அதாவது பிற சாதியினரின் ஆலயங்கள், மரணவீடுகள் என்பவற்றில் பறைமேளமடித்தல் எனும் சேவைசார்ந்த தொழிலினையே மேற்கொண்ட சமுதாயமாக இவர்கள் காணப்பட்டனர். சடங்குரீதியில் முக்கியத்துவம் பெற்ற கலையாக இருப்பினும் பறைமேளமானது சாதியின் தொழிலாக அவர்களது குறைவுற்ற அந்தஸ்தினை அடையாளத்துவப்படுத்தும் பொருள்சார்ந்த குறியீட்டம்சமேயாகும். (விக்னேஸ்வரன், 2016). பொதுவாக தமிழ் சமூகத்தில் அடுக்கமைவில் தாழ்நிலைக் கட்டமைப்புச் சமூகங்களே பயில்கலைகளை மேற்கொள்வதால், தமிழ் பகுதிகளில் பயில்கலைகள் சமுகரீதியல் தரம்குறைந்து நோக்கப்படும் தன்மை காணப்படுகின்றது. (Thiruchandran, 1997: p. 148). பறைமேளக்கலை, கூத்து என்பன பறையர் சமூகத்தினரால் பின்பற்றப்பட்டுவந்த பயில்கலைகளாகும். இது அவர்களது சாதித் தொழிலாகும். இவர்கள் மரணவீடுகளில் மட்டுமன்றி, ஆலயங்கள், வைபவங்கள் என்பவற்றிலும் இதனை மேற்கொண்டிருப்பினும் அந்தஸ்தில் ஒடுக்கப்பட்ட நிலையே இதற்களிக்கப்பட்டிருந்தது.

சேவையாகவும், கலையாகவும் கருதப்படும் பறைமேளமடித்தலை மேற்கொள்ளும் ஒரு குழுவுக்கு சமூகத்தில் அந்தஸ்த்துக் குறைவான, தீண்டத்தகாத மதிப்பு அல்லது அந்தஸ்து அளிக்கப்படுவதாக இருந்தால், அதனை உடன் நிறுத்த வேண்டும் எனும் நிலைப்பாட்டை இச்சமுதாயத்தின் படித்த இளைஞர்களும் பொருளாதாரரீதியாக மேம்பட்ட பிரிவினரும் கொண்டிருந்தனர். இதனால் திட்டமிட்ட செயற்பாடுகள் ஊடாக பறைமேளத் தொழிலினை தமது சமுதாயத்தினர் நிறுத்துவதற்கான வழிவகைகளைக் கையாண்டனர். இதில் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் முதல் தீவிரமான அச்சுறுத்தல்கள் வரை பறைமேளத்தினைத் தொழிலாகச் செய்யும் தமது சமுதாய உறுப்பினர்கள் மத்தியில் மேற்கொண்டனர். ஆலயங்களில் இருந்த பறைமேளங்களை உடைத்து, இது தொடர்பான தமது அக்கறையை தமது உறுப்பினர்களுக்கு அவர்கள் புலப்படுத்தினர். இவ்வாறு நோக்கம் கருதிய செயற்பாடுகள் மூலம் பறைமேளத்திற்கும் தமக்குமான தொடர்பினை இல்லாது செய்யும் நிலையில், சடங்கு சார்ந்த தமது பாரம்பரியங்களில் இருந்தும் இதனை வழக்கிழக்கச் செய்துள்ளனர். இது சமூக அந்தஸ்து நிலையில் ஒடுக்கப்பட்ட தன்மை கருதி மேற்கொள்ளப்பட்ட கைங்கரியமாகும். அந்தஸ்த்தின் குறைவுற்ற நிலைப்பாட்டிற்கு காரணமாக பறைமேளமடித்தலில் இருந்து அவர்கள் விலகியிருப்பது அந்தஸ்தின் படிநிலையில் ஒரு மாற்றத்தை கருதியேயாகும். அதாவது பொருளாதார அடுக்கமைவில் அந்தஸ்து உயர்வினைப் பெற்ற குடும்பங்கள் சாதி அமைப்பில் ஒடுக்கப்பட்ட அந்தஸ்த்தில் இருந்து விடுபடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நோக்கம் கருதிய செயற்பாடே இதுவாகும். எது எவ்வாறெனினும் பறைமேளக்கலையானது குறிப்பிட்ட சமுதாய ஆலயங்களில் இருந்து வழக்கொழிக்கப்பட்டது என்பதே யதார்த்தம்.

இரண்டாவதாக, இச்சாதிச் சமூகத்தினர் வழக்கொழித்த பறைமேளக்கலையானது அவர்களது ஆலய சடங்குகளில் பிரதான இடம்பெற்றிருப்பினும், வழக்கொழிக்கப்பட்ட பின்னர் சடங்குகளில் எந்தவித தாக்கத்தினையும் ஏற்படுத்தவில்லை. அதாவது சடங்குகளின் குறியீட்டுரீதியான அர்த்தப்பாடுகளை உருவாக்குவதிலும், அந்தச் சூழ்நிலையில் உள்வாங்கப்பட்ட மக்களின் நம்பிக்கை முறைமையிலும் எதிர்மறையான பிரதிபலிப்புக்களை இந்த வழக்கொழிப்பானது உருவாக்கவில்லை. சடங்குகளில் வெளிப்படுத்தப்படும் குறியீடுகள் சமயச் சூழ்நிலையில் குறிப்பிட்ட அர்த்தப்பாடுகளை உருவாக்குகின்றன. குறியீட்டு மானிடவியல் கோட்பாடுகளின்படி குறியீடுகள் குறிப்பிட்ட சூழ்நிலையில் விளங்கிக் கொள்ளத்தக்கதான அர்த்தப்பாடுகளை கொண்டுள்ளன. உண்மையில் குறியீடுகளிற்கான அர்த்தங்கள் அச்சூழ்நிலையினை உருவாக்குகின்ற மக்களாலேயே வியாக்கியானிப்பின் மூலம் உருவாக்கப்படுகின்றன. (Turner, 1968: p. 02). சடங்குகள் சமயச்சூழ்நிலையொன்றில் வியாக்கியானிக்கத்தக்கனவான குறியீடுகளை உள்ளடக்கியவை. இவ்வர்த்தங்கள் அச்சடங்குச் சூழ்நிலையில் மக்களின் நம்பிக்கை முறைமையுடனும் வாழ்வியல் முறைகளுக்கு பொருத்தமான வகையிலும் அமைந்திருக்கும். (Wallace, 1966). பறைமேளமானது பத்ததிச் சடங்கின் முக்கியமான

குறியீடாக அமைந்திருந்த போதிலும், சமூக அடையாளச் செயற்பாடு கருதி நீக்கப்பட்ட வேளையில், சடங்குகளின் செயற்பாடுகளில் விளைவுகளை உணரத்தக்க வகையில் அமைந்திருக்கவில்லை. சடங்குகளில் பங்குபற்றும் உறுப்பினர்களது பார்வையில், அவர்கள் எதிர்பார்க்கும் வகையில் பத்ததிச் சடங்குகளில் திருப்தித்தன்மையை அடைந்திருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டது. இங்கு பறைமேளமானது ஒரு வழக்கிழந்த பாரம்பரியமாகக் கொள்ளப்பட்ட அதேவேளை, அம்மக்களது நம்பிக்கை முறையில் எந்தவித தாக்கங்களையும் செலுத்தாமை, சடங்கில் அது மரபுரீதியான அடையாளமாகக் கொண்டிருந்த அர்த்தப்பாடுகள் சூழ்நிலையின் ஒழுங்கமைப்பில் அல்லது ஒட்டுமொத்த சடங்கு முறைமையில் பாதிப்புக்களையோ ஏற்படுத்தியிருக்கவில்லை.

இது குறியீட்டு மானிடவியலில் கிளிபோர்ட் கீட்ஸ் குறிப்பிடும் குறியீடுகள், அவற்றின் அர்த்தங்கள் சூழ்நிலைக்கேற்பவே பார்க்கப்பட வேண்டும் எனும் குறியியல் அணுகுமுறையுடன் இணைந்த யதார்த்தமாக பார்க்கப்பட முடியும். (Geertz, 1973: 18). அதாவது பறைமேளமானது ஒட்டுமொத்த சடங்கு முறையில் தொடர்புபட்டு அர்த்தப்பாடுகளை உருவாக்கும் குறியீடு அல்ல. ஒரு குறியீடாக குறிப்பிட்ட சூழ்நிலையில் மக்களால் அதற்களிக்கப்பட்ட முக்கியத்துவம், அதே சூழ்நிலையில் அம்மக்களால் விலக்கப்பட்டுள்ளது. எனவே குறியீடுகள் சூழ்நிலைக்கேற்ப மக்களால் வியாக்கியானிக்கப்படுவதும், முறைமையிலன்றி சூழ்நிலைக்குரிய செயற்பாடுகளையே அவை கொண்டிருக்கும் என்பதும் உறுதிப்படுத்தப்படக் கூடியதாக அமைந்துள்ளது. இந்த யதார்த்தத்தின் பின்னணியிற்தான் சாதி அந்தஸ்தினை அடையாளப்படுத்தும் பறைமேளக்கலையை சடங்குரீதியான தளத்தில் இருந்து விலக்கியிருந்தனர். இச்செயற்பாடானது ஒட்டுமொத்த சடங்கு முறைமையில் தடங்கல்களை ஏற்படுத்தாமையினாலும் நம்பிக்கை முறைமை சார்ந்த பார்வையில் தாக்கங்களை உருவாக்காத பட்சத்திலும், அதன் வழக்கொழிதல் சாத்தியமாகி போயிற்று.

**5.0. முடிவுரை**

இவ்வாய்வின் கண்டறிதல்கள் குறியீட்டு மானிடவியல் சார்ந்த அடிப்படையில் பண்பாட்டு முறைமையில் குறியீட்டு அடையாளத்துவங்கள் தனித்துவமான அர்த்தப்பாடுகளை ஏற்படுத்துகின்றது என்பதனையும் அவை சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப்படுகின்றன என்பதனையும் விபரிக்கின்றன. இவ்வாய்வில் இக்குறிப்பிட்ட சாதியினர் அடையாளத்துவ மாற்றம் கருதி முறைமையை மாற்றவில்லை. மாறாக முறைமையின் ஒரு கூறினையே அகற்றுகின்றனர். இதன்படி இரண்டு கோட்பாட்டு விளக்கங்கள் உறுதி செய்யப்படத்தக்கனவாக காணப்படுகின்றன. அதாவது குறியீடுகள் அதன் அர்த்தங்கள் மனிதர்களால் சூழ்நிலை கருதி உருவாக்கப்படுவதே தவிர அவை புறவயமான காரணிகளால் நிர்ணயிக்கப்படவில்லை. இதனால் மனிதர்களால் உருவாக்கப்படும் அவை, நோக்கம் கருதி அவர்களினால் சூழ்நிலைக்கேற்ப மாற்றப்படவும் முடியும்.

அத்தோடு குறியீடுகளின் அர்த்தங்கள் கலாசாரத்தின் ஒட்டுமொத்த முறைமையுடன் தொடர்புபடுத்தி விளங்கிக்கொள்ளப்படும் கட்டாயத்தினை கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு கலாசாரத்தினதும் முறைமையில் காணப்படும் கூறுகள் தனித்தனியாக பிரித்து நோக்கப்படத்தக்கவை. பெறுமதிசார்ந்த அடிப்படையில் இவ்வாய்வின் முடிவுகளை நோக்கும் போது சாதிரீதியான பாரம்பரியங்கள் பாராபட்சங்களுக்கு காரணமாகினால் அவை வழக்கிழப்பதில் தவறில்லை என்று கூற முடியும். ஆனால் அந்த வழக்கிழக்கும் வழியே மரபுரீதியான கலைகளும் வழக்கொழிந்து போவது கவலை கொள்ளத்தக்க விடயம் தான். கலைகள் சாதிக்குரிய உடைமைகளாக கருதப்படுகின்றபட்சத்தில், சாதிகளுக்குரிய அடையாளத்துவத்தை உருவாக்கும் பொருள்சார்ந்த பண்பாடுகளாக அவை காணப்படும்பட்சத்தில் அச்சாதிகள் பாராபட்சப்படுத்தப்படும் அடையாளத்துவத்தை மாற்றுவதற்காக பொருள்சார்ந்த பண்பாட்டு கூறுகளான அந்த கலைகளையும் கைவிடக்கூடிய நிலைமைக்கு உள்ளாகின்றனர். இதனால் கலைகளை சாதிக்குரிய உடைமைகளாக்காது சமூகத்திற்குரியதாக கருதப்படும்பட்சத்தில் நடைமுறையில் அவை கைக்கொள்ளப்படும் பட்சத்திலும் அவை வழக்கொழியாது பாதுகாக்கப்படும் என்பது இவ்வாய்வின் முன்மொழிதலாகும்.

**உசாத்துணை**


Douglas, Mary. (1970). Purity and Danger. Baltimore: Penguin Books.

Dumont, Louis. (2004). Homo Hierarchicus; the Caste System and its Implications, New Delhi: Oxford University Press.

Durkheim, Emile. (1965). The Elementary forms of the religious life. New York: Free press.

Geertz, Clifford. (1966). Religion as a Cultural System. In Michael Banton (Ed.), Anthropological Approaches to the study of religion. London: Tavistock.

Geertz, Clifford. (1973). The Interpretation of Culture, New York: Basic Books.

Howard, Michael C and Janet D.H. (1992). Anthropology. Understanding Human Adaptation. New York: Harper Collins.

Jah, Makhan. (1999). An Introduction to Social Anthropology, New Delhi: Vikas Publishing House.

Keesing, Roger M. (1935). Cultural Anthropology: A contemporary perspective, New York: Holt, Rinehart and Winston.

Kottak, Conrad Phillip. (2008). Anthropology: The Exploration of Human Diversity, New York: McGraw Hill.

Nanda, Serena. (1980). Cultural Anthropology, New York: D. Van Nostrand Company.

Srinivas, M. N. (1952). Religion and Society among the Coorgs of South India. Oxford: At the Clarendon Press.

Silva, Kalinga Tudor, Sivapragasam, P.P. and Thanges, Paramsothy, (Eds). (2009). Casteless or Caste-blind: Dynamics of Concealed Caste Discrimination, Social Exclusion and Protest in Sri Lanka, Chennai: Kumaran Book House.

Thiruchandran, S. (1997). Ideology, Caste, Class and Gender, New Delhi: Vikas Publishing House PVT Ltd.

Turner, Victor W. (1968). The Drums of Affliction: A study of religious processes among the Ndembu of Zambia. Oxford: Clarendon Press.

Turner, V. W. (1969). The Ritual Process. Chicago: Aldine.

Vickneswaran, G. (2018 December 17). *Inter-caste Value Consensus and Social Harmony; An Anthropological field study on Rustic Rituals of Māri Amman Worship in Kaluthavalai Village* (Paper presentation). International Symposium - 2018, South Eastern University of Sri Lanka, Oluvil. http://www.seu.ac.lk/intsym2018/downloads/Proceedings_IntSym2018.pdf

Wallace, Anthony., (1966). Religion: An Anthropological View, New York: Random house.

குணபாலசிங்கம், வ. மற்றும் விக்னேஸ்வரன், கு. (2017 ஒக்டோபர் 21-13). மட்டக்களப்பு வழிபாட்டு மரபுகளில் பெண்களின் வகிபாகம்: பத்தாசி வழிபாட்டு மரபினை மையப்படுத்திய ஓர் நோக்கு. (Paper Presentation). Annual Research Session of Eastern University Sri Lanka (ARS 2017): Nurturing a Conducive Environment for Helthier Future, Faculty of Health Care Sciences, Eastern University, Batticaloa, Sri Lanka.

குணபாலசிங்கம், வ. மற்றும் விக்னேஸ்வரன், கு.. (2017 (அ) நவம்பர் 28-30). கிழக்கிலங்கை வழிபாட்டு மரபுகளும் சமஸ்கிருதமயமாதலும்: மட்டக்களப்பு ஜெயந்திபுரம் குமாரத்தன் கோயிலை மையப்படுத்திய ஓர் ஆய்வு. (Paper Presentation). Twenty Second Annual Conference and International Seminar on "Personal Freedom, Cultural Practices, Global Governance and Peaceful Co-existence" Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka.

விக்னேஸ்வரன், கு., (2016). சாதி அடையாளத்தின் பொருள்சார் சமூக உண்மைகளும் கட்டமைப்புசார் சமூக வன்முறைகளும், Neithal, Annual Faculty Journal of Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. Vol: 08, No:ii.